

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.01.2026) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, ஏழுகிணறு, அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில், 147 கோடி ரூபாய் செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 776 அடுக்குமாடி குடியிருப்புகளைக் கொண்ட ”முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்” திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.01.2026) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, ஏழுகிணறு, அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில், 147 கோடி ரூபாய் செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 776 அடுக்குமாடி குடியிருப்புகளைக் கொண்ட ‘முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்’ திறந்து வைத்து, ஒதுக்கீட்டு ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள், மேயர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயரலுவலர்கள் உள்ளனர்.

### வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில்

# ஏழு கிணறு பகுதியில் ரூ.147 கோடி செலவில் 776 அடுக்குமாடி குடியிருப்புகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜன. 23 -**

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, ஏழுகிணறு பகுதியில் ரூ.147 கோடி செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 776 அடுக்குமாடி குடியிருப்புகள் கொண்ட“முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்” திறந்து வைத்து, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் ரூ.26 கோடி மதிப்பீட்டில் 144 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.01.2026) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, ஏழுகிணறு, அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில், 147 கோடி ரூபாய் செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 776 அடுக்குமாடி குடியிருப்பு களைக் கொண்ட“ முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்” திறந்து வைத்து, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 144 புதிய அடுக்குமாடி குடியிருப்பு களுக்கான கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உன்னத திட்டமான வடசென்னை வளர்ச்சி திட்டம், வடசென்னை பகுதியின் சமர்ச்சீர் வளர்ச்சியை நோக்கமாக கொண்டு சுகாதாரம், கல்வி, நகர உட்கட்டமைப்பு, பாதுகாப்பான குடிநீர், கழிவுநீர் வசதி, மின்சாரம், வாழ்விடம் போன்ற வசதிகளை ஏற்படுத்தி தருகிறது.

**“முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்” திறப்பு**

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியாக மண்ணடி, முத்தியால் பேட்டை, ஏழுகிணறு, பிராட்வே பிர காசம் சாலை, வால்டாக்ஸ் சாலை, ஜட்காபுரம், கல்யாணபுரம், வுட்வொர்ஃப் போன்ற இடங்களில் நீண்ட காலமாக சாலை ஓரங்களிலும், கால்வாய் ஓரங்களிலும் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் வகையில் **முதலமைச்சர் அவர்களால் வட சென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ்** கடந்த 4.12.2024 அன்று சென்னை, வால்டாக்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, சென்னை, ஏழுகிணறு, பழைய சிறைச்சாலை சாலையில் அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில், 776 அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்திடும் வகையில் முதலமைச்சர் அவர்கள் கடந்த 31.01.2025 அன்று களஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோ சனைகள் வழங்கினார்.

அதன்படி, குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு, வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் **147 கோடி ரூபாய்** செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் தரைதளம் மற்றும் 9 தளங்களுடன் இரண்டு தொகுதிகளாக **3,26,609 சதுர அடி** கட்டடப் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள 776 அடுக்குமாடி குடியிருப்புகளை கொண்ட **“முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்”** முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

பின்னர், அங்கன்வாடி மையம், நகர்ப்புற நலவாழ்வு மையம், நியாய விலைக் கடைகள், முதல்வர் படைப்பகம், நவீன நூலகம், உடற்பயிற்சிக்கூடம், திறந்தவெளி அரங்கம், குழந்தைகள் விளையாட்டுப் பகுதி ஆகியவற்றை பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள், முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளையும், நலத்திட்ட உதவிகளையும் பயனாளிகளுக்கு வழங்கினார். ஒதுக்கீட்டு ஆணைகளை பெற்றுக்கொண்ட பயனாளிகள் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

**“முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகளில்”** உள்ள ஒவ்வொரு குடியிருப்பும் **415 சதுர அடி** பரப்பளவில் சமையலறை, கூடம் (Hall), படுக்கைஅறை, கழிப்பறை மற்றும் குளியலறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளதோடு மாற்றுத்திறனாளிகளுக்கென 40 குடியிருப்புகளும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**“முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்”** வளாகத்திலுள்ள உட்கட்டமைப்பு வசதி கட்டடத்தில் **“அங்கன்வாடி மையம்”**, நகர்ப்புற நல வாழ்வு மையம், **“நியாய விலைக் கடைகள்”**, **“முதல்வர் படைப்பகம்”**, **“நவீன நூலகம்”**, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பிரத்தியேக **“உடற்பயிற்சிக் கூடம்”** அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இவ்வளாகத்தில் மாணவச் செல்வங்களை நெறிப்படுத்தும் வகையில் **“திறந்தவெளி அரங்கம்”**, **“குழந்தைகள் விளையாட்டுப் பகுதி”**, பூங்காக்கள், 8 எண்ணிக்கையிலான மின்தூக்கி வசதிகள், கண்காணிப்பு கேமராக்கள், சீரான மின்சாரம் வழங்கிடும் வகையில் இரண்டு எண்ணிக்கையிலான 500 KVA திறன் கொண்ட மின்மாற்றிகள், 6 இலட்சம் லிட்டர் கொள்ள எவு கொண்ட கீழ்நிலை நீர் தேக்கத் தொட்டிகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், தீயணைப்பு குழாய் தொட்டிகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் என பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர்தொட்டி தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் “ஒருங்கிணைந்த வளாகத்தில்” 700 அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளன. இதன் அருகில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைதளம் மற்றும் 9 தளங்களுடன் கூடுதலாக 144 புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி. வினய், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மேலாண்மை இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங், பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தஞ்சையில் நடைபெறும் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” மாநாடு,

# அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

*அரியலூர், ஜன. 23 -*

*அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி வருகின்ற 26 ஆம் தேதி தஞ்சையில் நடைபெறவுள்ள வெல்லும் தமிழ்ப் பெண்கள் மாநாட்டிற்கான, ஆலோசனைக் கூட்டம்*

*அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள ரிதன்யா மஹாலில் அரியலூர் மாவட்ட செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில மகளிர் அணி செயலாளருமான ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மாநிலப் பிரச்சாரக் குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.*

*கூட்டத்தில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:-*

*இந்தியாவிலேயே மகளிர்க்கான ஒரு ஆட்சி நடத்துவது நம் தமிழ்நாடு அரசு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மட்டுமே. அவரைத் தவிர வேறு எவரும் இப்படியான ஒரு ஆட்சியை நடத்தவில்லை. தேர்தலில் வாக்குறுதி அளித்தபடி மகளிர் விடியல் பயணம், மகளிர் உரிமைத் தொகை என சொல்லிய திட்டங்களை கொண்டு வந்து, செயல்படுத்தி காட்டியவர் நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான்*

*பா.ஜ.க.வினர் ஆரம்பத்தில் இத்திட்டத்தினை கேலி செய்தனர். மாறாக இன்று பா.ஜ.க. ஆளுகின்ற மாநிலங்களில், நம்முடைய திட்டத்தை காப்பி அடித்து கொண்டு வந்துள்ளனர். தேர்தல் முடிந்த உடனேயே திட்டத்தில் படிப்படியாக பயனாளிகளின் எண்ணிக்கையை பா.ஜ.க.வினர் குறைத்துவிட்டனர். மாறாக நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு, மகளிர் உரிமைத்தகையை வழங்கினார். தற்பொழுது அத்திட்டத்தில் கூடுதலாக மேலும் 16 லட்சம் மகளிர் இணைக்கப்பட்டு, ஒரு கோடியே 31 லட்சம் பேருக்கு மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.*

*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் செயல்படும் மகளிர் சிறப்பு செயலாக்க திட்ட துறையின் மூலம், மகளிர் சுய உதவி குழுவிற்கு கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.*

*கல்லூரி படிக்கும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புது மைப் பெண் திட்டம் வழங்கியுள்ளார். இனி வரும் ஆண்டுகளுக்குள் கல்லூரி செல்லாத பெண்களே இல்லை என்ற நிலை உருவாகும். வெறும் பொருளாதார சூழலுக்கு மட்டுமல்லாது, கல்விக்கும் தேவை என்பதற்காக தான் புதுமைப்பெண் திட்டத்தை முதலமைச்சர் கொண்டு வந்துள்ளார்.*

*ஒரு காலத்தில் பெண்கள் அனைவரும் எம்.ஜி.ஆர் பின்னால், ஜெயலலிதா பின்னால் நின்றார்கள் என சொல்வார்கள். ஏனெனில் எம்.ஜி.ஆர் சினிமாவில் நடித்த கவர்ச்சியின் காரணமாகவும், ஜெயலலிதா எனில் அவர் ஒரு பெண்ணாக இருக்கிறார். ஆண்களுக்கு பயப்படாமல் இருக்கிறார் என்ற காரணத்திற்காக, பெண்கள் அவர் பின்னால் நின்றதாக சொன்னார்கள். ஆனால், நமது முதலமைச்சர் சினிமா கவர்ச்சி இல்லாமல், பெண்களுக்கான திட்டங்களை வழங்கியதன் காரணமாக அவர்கள் பின்னால் இன்று பெண்கள் அணி திரண்டு நிற்கிறார்கள் என்ற நிலை உருவாகியுள்ளது.*

*எனவே உங்கள் ஊரில், உங்கள் தெருவில் உள்ள மற்ற சகோதரர்களிடம் முதலமைச்சரின் திட்டங்களையும், அவரின் அயராத பணிகளை எடுத்துக் கூறி கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக அரியணை ஏறுவதற்கும், கழகம் 7 முறையாக ஆட்சியமைக்க நாம் அனைவரும் அயராது உழைத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.*

*இந்நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் கழக சட்டத் திட்டத் திருத்தக்குழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மீனா சாமிநாதன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மகளிர் அணி, தொண்டர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.*








கோவை காந்திபுரத்தில் ரூ 300 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையத்தின் கட்டுமானப் பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் கிரியப்பன்வர், மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, தி.மு.கழக தீர்மானக்குழு செயலாளர் நா. கார்த்திக், பொள்ளாச்சி நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி, கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு மா.பிரபாகரன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.